


- வாழ்வோம்

காவத்தின் குரல்

தள்ளாடும் தமிழ்நாடு

தடுமாறும் பொருளாதாரம்!

தமிழ்நாட்டில் நடுத்தர மக்கள் - அடித்தட்டு மக்கள் யார் முகத்திலும் பண்டிகைக்கால மகிழ்ச்சியின் சாயல் இல்லை. எல்லோரும் ஏதோ ஒரு வகையில் பொருளாதாரப் புழுக்கத்தில் உள்ளனர். அரிசி, பருப்பு, காய்கனிகள் உள்ளிட்ட அன்றாடச் செலவினங்கள், தங்களின் வருமானத்தை மீறி அதிகரித்துள்ளதை வருத்தத்துடன் பகிர்ந்துகொள்கின்றனர். அதிலும் குறிப்பாக, கடந்த நான்கைந்து மாதங்களில் அத்தியாவசியப் பொருள்களில் நிகழ்ந்துள்ள வரலாறு காணாத விலையேற்றம், தனிநபர் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதைப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அந்தத் தாக்கம், பண்டிகைக்கால பணப்புழக்கத்தில் எதிரொலித்துள்ளது. விவசாயிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என எல்லோரிடமும் நீடிக்கும் இந்த அழுத்தம் த.வெ.க. ஆட்சியினால் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் மக்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், இந்த விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பணப்புழக்கத்தைச் சீர்செய்வதற்கான எந்தத் திட்டமும் எதிர்கால இலக்கும் இல்லை என்பதுதான், கடந்த ஐந்து மாத ஆட்சிக்கால நிர்வாக முறையில் இருந்து நமக்குக் கிடைக்கும் உண்மை.

■ ஒன்றோடொன்று இணைந்தவை!

பொதுவாக, மக்களின் அன்றாட வருமானம், செலவு, வாங்கும் சக்தி ஆகியவற்றைப் பேசுவது தனிநபர் பொருளாதாரம். தொழில் முதலீடுகள், உற்பத்தி, தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு, ஏற்றுமதி ஆகியவற்றைப் பேசுவது தொழில் பொருளாதாரம். இவ் விரண்டும் ஒன்றையொன்றைச் சார்ந்துள்ளன. இதன் ஒட்டுமொத்த விளைவுதான் மாநிலத்தின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கிறது. அந்த வகையில், கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தின் இறுதியில், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவிகிதத்துடன் புதிய இலக்கை எட்டியதை அறிவோம். தவிர, நுகர்பொருள் வளர்ச்சியிலும் தேசிய சராசரியைவிட தமிழ்நாடு சிறப்பான வளர்ச்சியை 2021 - 2026 காலம் எட்டியிருந்தது.

மாநிலத்தின் பொருளாதாரம் வளரும்போது, மக்களின் வாங்கும் திறன், நுகர்வு, நிறுவனங்களின் விற்பனை, உற்பத்தி ஆகியவை அதிகரிக்கும். இதனால் அரசுக்குக் கிடைக்கும் ஜி.எஸ்.டி., விற்பனை வரி, முத்திரைத்தாள் மற்றும் பதிவுக்கட்டணம், வாகன வரி போன்ற வருவாய்களும் உயரும். அந்த வகையில், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மாநிலத்தின் சொந்த வருவாய் உயர்ந்திருந்தது. ஒன்றிய அரசிடமிருந்து வரும் வரிப்பங்கு மற்றும் மானியங்கள் அடங்கிய மொத்த வருவாயும் அதிகரித்தது. இந்த விவரங்கள் எல்லாம் கடந்த ஆண்டுகளின் தமிழ்நாடு மாநில நிதிநிலைத் தணிக்கை அறிக்கையிலேயே காணக்கிடைக்கின்றன. அதே நேரத்தில், நுகர்பொருள் சார்ந்த சில்லறை பணவீக்கக் குறியீடுகளும், நாட்டின் சராசரியைவிட குறைவாகவோ, அதற்கு இணையாகவோ இருந்தது. அதாவது, விலைவாசி உயர்வின் வேகத்தை ஒப்பீட்டளவில் கட்டுக்குள் வைத்திருந்தது, திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதாவது, பணத்தின் மதிப்பு குறைந்தாலும், பொருள்களின் விலை உயர்வின் வேகத்தைக் குறைத்திருந்தது. அதே நேரத்தில், நேரடிப் பண உதவியாக 'மகளிர் உரிமைத் தொகை', 'புதுமைப்பெண் திட்டங்கள்', 'மகளிர் சுய உதவிக்குழு' எனப் பல வகைகளில் மக்களின் கையில் பணத்தைக் கொண்டுசேர்க்கும் நடவடிக்கைகளையும் திராவிட மாடல் அரசு செய்துவந்தது. அந்தப் பணப்புழக்கம் மக்களின் உடனடி நுகர்வுத் தேவையை நிறைவேற்றின. ஆனால், அந்தப் பணம் நீடித்த வருமானமாக மாறவேண்டுமானால், வேலை வாய்ப்பு, உற்பத்தி, தொழில் வளர்ச்சி, ஊதிய உயர்வு ஆகியவையும் இணைந்திருக்க வேண்டும்.



■ முதலீடுகளும் வேலைவாய்ப்பும்!

வேலைவாய்ப்பு, உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால், புதிய தொழிற்சாலைகள் உருவாக வேண்டும். ஏற்கெனவே இயங்கும் தொழில்கள் விரிவடைய வேண்டும். புதிய முதலீட்டாளர்களை ஈர்ப்பது, இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கம், சிறு-குறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி என அனைத்தும் சேர்ந்தார்ப்போல நிகழ வேண்டும். தவிர, வளர்ச்சி என்பது சென்னை, ஓசூர், கோயம்புத்தூர் போன்ற சில தொழில்சார் நகரங்களுடன் மட்டும் நின்றுவிடாமல், பரவலாக அனைத்து மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டும். சிறுதொழில்களுக்கு நிலம், கடன், மின்சாரம், தொழில்நுட்பம், சந்தை வாய்ப்பு ஆகியவை கிடைக்க வேண்டும். பெரிய நிறுவனங்களின் முதலீடுகளோடு அவற்றுக்கு உதிரிபாகங்கள் வழங்கும் உள்ளூர் நிறுவனங்களும் வளர வேண்டும். இதற்கான தொழிற்பேட்டைகள், தொழில் வழித்தடங்கள், தளவாட மையங்கள் ஆகிய வற்றை விரிவுபடுத்த வேண்டும். இவை எல்லாவற்றிலும் புதிய வேகத்தை எட்டியது முந்தைய தி.மு.கழக ஆட்சி.

இந்த ஒன்றுக்கொன்று தொடர்புடைய வளர்ச்சி இலக்கில்தான் கோட்டைவிட்டுக் கொண்டிருக்கிறது, த.வெ.க.

ஆகஸ்ட் 5 அன்று தாக்கல் செய்யப்பட்ட தமிழ்நாடு நிதி நிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் பொருளாதார இலக்கு 1.5 இலட்சம் கோடி டாலர் எனக் கூறினர். முந்தைய திராவிட மாடல் அரசு, ஒரு இலட்சம் கோடி டாலர் என்கிற இலக்கு வைத்து வேலைகளை முடுக்கியதை அறிவோம். ஆனால், த.வெ.க. அரசின் முதல் வரவு-செலவு அறிக்கையில் எந்த முன் அறிவிப்பும் இல்லாமல், 1.5 இலட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கு வைத்தது ஆச்சர்யம் அளித்தது. அந்தக் கனவை நனவாக்குவதற்கு ஆண்டுதோறும் எவ்வளவு முதலீடு தேவை, எந்தெந்தத் துறைகளில் எத்தனை புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும், மாவட்டங்களுக்கிடையிலான தொழில் வளர்ச்சி இடைவெளி எவ்வாறு குறைக்கப்படும், சிறு - குறு நிறுவனங்களுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு எவ்வாறு விரிவுபடுத்தப்படும், முதலீட்டாளர்களுடன் அரசின் தொடர்பு எவ்வாறு வலுப்படுத்தப்படும் என்பதற்கான எந்த விளக்கமும் அப்போது அளிக்கப்படவில்லை. இப்போதும் இல்லை. அதற்கான முனைப்பான நடவடிக்கைகளும் போதிய தரவுகளுடன் இல்லை என்பதுதான் உண்மை.

'பரந்தூர் பசுமைவெளி விமான நிலையம்', 'ஓசூர் அறிவுசார் வழித்தடம்' உள்ளிட்ட பல திட்டங்கள் கைவிடப் பட்டுள்ளன. ஏற்கெனவே, தமிழ்நாட்டில் முதலீடு செய்யத் திட்டமிட்ட 'கியா', 'ஹூண்டாய்' நிறுவனங்களின் உதிரிபாக ஆலைகள் வேறுபக்கம் திருப்பி விடப்பட் டுள்ளன. ஏற்கெனவே, 'ராயல் என்ஃபீல்டு', 'ஹையர்' போன்ற நிறுவனங்கள் தமிழ் நாட்டில் திட்டமிட்ட முதலீடுகளை வெளிமாநிலங்களுக்குத் திருப்பி விட்டுள்ளன. இந்த நிறுவனங்கள் முதலீடுகளை வேறுபக்கம் கொண்டுசெல்வது என்பது, அவர்களின் நிர்வாக முடிவு மட்டுமல்ல; அது தமிழ் நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியுடன் நேரடியாகத் தொடர்பு டையவை.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தவேண்டிய நேரத்தில், முதலீட்டுப் போட்டியில் அண்டை மா நிலங்கள் முன்னேறுவதையும், ஜி.எஸ்.டி. வளர்ச்சியில் மாநிலம் பின்தங்கி யிருப்பதையும், சொந்த வருவாய் குறைந்து வருவதையும் சுட்டிக்காட்டினால், அதை ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் இல்லை.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், முன்னாள் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, "அக்டோபர் மாத ஜி.எஸ்.டி. வரி வருவாயில்,கேரளா, ஆந்திரா, கர்நாடகா தெலங்கானா என அண்டை மாநிலங்கள் இரட்டை இலக்கத்தில் வளர, தமிழ்நாடு வெறும் 3 சதவிகித வளர்ச்சியோடு பின்தங்கியுள்ளது" என்று சுட்டிக்காட்டி, மாநிலத்தின் சொந்த நிதி வருவாய் குறைந்துவருவதை எடுத்துக்காட்டினார். ஆனால், அதைக்கூட ஆலோசனையாக எடுத்துக்கொள்ள முடியாத ஆணவ நிலையில்தான் இன்றைய த.வெ.க. அரசு உள்ளது. இந்தப் போக்குகளையெல்லாம் கவனிக்கையில், தமிழ்நாட்டின் அன்றாடப் பொருள்களின் விலை வாசியைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்கிற நம்பிக்கை இல்லை.



நீரை மகேந்திரன் ■

சமீபத்தில் வெங்காய விலையைக் கட்டுப்படுத்துகிறேன் என மகாராஷ்டிராவில் இருந்து வெங்காயம் கொள்முதல் செய்த விவகாரத்தையே பார்க்கலாம். இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (NAFED) மூலம் தமிழ்நாடு அரசு 450 மெட்ரிக் டன் வெங்காயம் கொள்முதல் செய்தது. அந்த வெங்காயம் தரமற்றது என, கிடங்கில் இருந்து லாரிகளில் ஏற்றப்பட்ட அந்த வெங்காயத்தை எந்த ஊரிலும் வாங்கவில்லை. யாருக்கு இறக்குவது என்றும் தெரியவில்லை என லாரி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் தங்கள் வருத்தத்தைப் பதிவுசெய்துவருவதைப் பார்க்கிறோம். அதே நிலையில்தான் இன்று தமிழ்நாடு உள்ளது. மாநிலத்தின் பொருளாதாரத்தில் த.வெ.க. ஏற்படுத்தியுள்ள இந்தத் தடுமாற்றம், அடைந்த பல உயரங்களில் இருந்து தமிழ்நாட்டைச் சரியவைத்துக்கொண்டிருக்கிறது. ■

ப்ளாஷ்பேக்





கி.முகுந்தன்

பெரம்பலூரில் தலைவர் பரப்புரை!

1984-ஆம் ஆண்டு, சட்டமன்றப் பொதுத்தேர்தலின்போது, பெரம்பலூர் தொகுதியில் தேர்தல் பரப்புரையாற்ற தலைவர் கலைஞர் வருகைதந்தார். மேடையில் தலைவர் முன்னிலையில், கழக வேட்பாளர் சரோஜினி தங்கராசு அவர்கள், வாக்கு கேட்டு உரை நிகழ்த்துகிறார். தலைவர் அருகில், ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டச் செயலாளர் அண்ணன் அன்பில் தர்மலிங்கம் அவர்களும், அப்போது இலக்கிய அணி மாவட்டத் துணைச் செயலாளராக இருந்த நானும், பெரம்பலூர் ஒன்றியப் பெருந்தலைவர் மு.அட்சயகோபால், ஆலத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் பாடாலூர் சோமு, வேப்பந்தட்டை ஒன்றியச் செயலாளர் செல்ல கருப்பண்ணன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளோம்.

- கி.முகுந்தன்,
கழகப் பொதுக்குழு உறுப்பினர், பெரம்பலூர்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

பெரியார் அறிவுலகத்தில், ஜூன் மாதம் சீலிடப்பட்டு வைக்கப்பட்டுள்ள சில நூல்கள் வாங்கப்பட்டதில் முறைகேடு நடந்துள்ளதாக சர்ச்சை வெடித்துள்ள நிலையில்.. அது தொடர்பாக எழுதியுள்ள திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் பிரின்சு என்னாரெசுவின் பதிவு, கவனம் ஈர்த்துள்ளது.

`சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம்', `மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்', தமிழ்நாடு முழுவதும் பல முக்கிய நூலகங்களை உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலத்தில், புத்தகங்கள் வாங்குவதற்குத் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

சாணியடித்து தப்பப் பார்க்கிறது 'ரூட் மாஃபியா'!

நூலகங்களுக்குப் புத்தகங்களை வாங்குவதில் நடக்கும் சார்புத் தன்மை, ஊழல்களை ஒழிக்க, வெளிப்படையான முறையை அறிமுகப்படுத்தினார்கள், கடந்த ஆட்சியில்! ஆனால், கோவை பெரியார் அறிவுலகத்துக்கு வாங்கப்பட்ட புத்தகங்களில் போலிப் பதிப்பகங்கள், பொய்யான தகவல் களோடு, தமிழ்நாட்டின் வரலாற்றுக்குப் புறம்பான, அறிவுக்கு விரோதமான போலிப் புத்தகங்கள் என்று பெரும் ஊழல் நடந்திருக்கிறது; அதுவும், ஜூன் மாதத்தில் சீல் குத்தப்பட்ட புத்தகங்கள் போலியாக உருவாக்கப்பட்டு, அவ்வளவு பெரிய நூலகத்தின் சிறப்புக்கு, இழுக்கு சேர்க்கும் நோக்கோடு பெரும் ஊழல் நடந்திருக்கும் நிலையில்.. இதன் பின்னால் இருக்கும் `அதிகார அழுக்குகள்' எவை என்று கண்டுபிடிக்கப்பட்டு, உரிய கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

`விஜய்', `விஜய்', `விஜய்' என்று வரிசையாகப் புத்தகங்களை எழுதியவர்கள் யார்? என்பதெல்லாம் கேள்வியாக எழுப்பப்பட வேண்டும்.

சாணியடித்துவிட்டு தப்பித்துக்கொள்ளலாம் என்று `ரூட் மாஃபியா' தீவிரமாக வேலை செய்யும். சில `நடுநிலை' அடையாளவாதிகள் பொத்தாம் பொதுவாகக் குற்றம் சுமத்துவார்கள். குற்றம் இழைத்த எவரும் தப்பக் கூடாது. தப்ப முடியாது!' எனப் பதிவிட்டுள்ளார் அவர்.

தெரிந்து கொள்வோம்

1951

`அறிவகம்' கண்ட அண்ணா!

-ஆம் ஆண்டு, அறிஞர் அண்ணாவின் பெருமுயற்சியால், கழகத் தலைமை அலுவலகத்துக்காக, சென்னை சூரிய நாராயண செட்டித் தெருவில் புதிய கட்டடம் வாங்கப்பட்டது. ரூ.30,000 மதிப்பீட்டில் வாங்கப்பட்ட இக்கட்டடத்துக்கு `அறிவகம்' எனப் பெயர் சூட்டினார் அண்ணா. 02.12.1951-ஆம் ஆண்டு, நாகர்கோவிலைச் சேர்ந்த வி.எம்.ஜான், அறிவகத்தைத் திறந்துவைத்தார். திறப்பு விழாவைக் காண தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் தொண்டர்கள் வந்திருந்தனர். விழாவில், ஜி.கஸ்தூரியின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900